★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

ஊழியர்களை நிரந்தரமாக்குவது கூடாதென மாநிலங்களுக்கு டில்லி உத்தரவு!

சர்க்கார் ஊழியர்களின் வேலையைக் காயப்படுத்துவது கூடாதென எல்லா மாநிலங்களுக்கும் டில்லி சர்க்கார் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது என்றும், எனெனில், அப்படிக் காயப்படுத்தினால் —நிரந்தரமாக்கினால் புது மாநிலங்களுக்கு வந்து சேரும் ஊழியர்களின் கிலே கஷ்டமாகும் என்றும் மந்திரி சுப்பிரமணியம் சட்ட சபையில் கூறியிருக்கிறார்.

'திரு—கொச்சி, மைசூர் உட்பட எந்த மாநிலமும், ஊழியர்களின் வேலையை இப்போது நிரந்தரமாக்கமாட்டார்கள் என்று தான் நம்புகிறேன்' என்றும் அவர் கூறினாராம். 'அப்படி எந்த மாநிலமாயினும் செய்தால், டில்லி அந்தத் தவறினைத் திருத்தும்' என்ற நம்பிக்கையூட்டினாராம்!

ஞாயிறு 4] சென்னை: ஆவணி 2ஊ வெள்ளி (17—8—56) ★ ★ வெளியூர்: ஆவணி 3ஊ சனி (18—8—56) [இதழ் 58

காங்கிரஸ் மேலிடப் பிடிவாதத்தின் எதிரொலி

'மொரார்ஜியைவிட டயர் துரை மேல் அல்லவா?'

'வெள்ளை ஏகாதிபத்திய வெறியனே 1,800 ரவுண்டுகளே சுட்டான்; அகிம்சா வீரர்களோ 2,500 ரவுண்டுகள் சுட்டனரே!'

சென்னைக் கூட்டத்தில் மு. கருணாநிதி விளக்கம்

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடும் என்ற செய்தி கிடைத்தது முதல், இந்த பெத்தநாய்க்கன் பேட்டையில் மட்டுமின்றி பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று இந்த மாநில முதன் மந்திரி காமராசர் கழகத்தைப் பற்றி இழித்தும் பழித்தும் பேசி வருகிறார். இப்படிப் பேசுவதின் மூலம், கழகம் தேர்தலில் பெறக்கூடிய வெற்றியைக் கணிசமான அளவு குறைத்துவிடலாம் என்று அவர் தப்புக் கணக்குப் போட்டிருக்கிறார்.

"நம்மிடத்தில் பண பலமில்லை—படை பலமில்லை—என்று இல்லாத பலங்கள் குறித்தெல்லாம் அவர் பேசுகிறாராம்.

"ஆனால், அவருக்கு ஒன்றினைமட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேம்; 'தேர்தலில் நிற்கவேண்டுமா, வேண்டாமா?'—என்று எந்த ஒரு கட்சியும் இதுவரை மக்களைக் கேட்டதில்லை. தேர்தலில் நிற்க முடிவு செய்துவிட்டு, பின்னர் மக்களிடம் ஓட்டுக் கேட்கத்தான் வருவர். ஆனால் தி. மு. கழகம், 'தேர்தலில் நிற்பதா, வேண்டாமா?' என்ற முடிவையே மக்களின் தீர்ப்பிற்கு விட்டது.

"மக்கள் தீர்ப்புக்கு இணங்கவே—திருச்சி மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 33 தீர்மானங்களில், கடைசித் தீர்மானமாக, 'தேர்தலில் நிற்பது' என்று முடிவு செய்யப்பட்டது.

"பையனுக்கு ஆறு வயதாகிவிட்டது; பள்ளிக்கு அனுப்புகிறேம்; அதுபோலவே மக்களின் உள்ளத்தில் சங்கமமாகியுள்ள தி. மு. கழகம் வளர்ந்துள்ளது; தேர்தலுக்கு நிற்கிறது; இதில் ஆச்சரியப்படுவதற்கோ அதிர்ச்சியடைவதற்கோ என்ன இருக்கிறது?

"சுதந்திர தினத்தன்று, குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட கோச்சு வண்டியில் ஏறி, சென்னை நகரத் தெருக்களில் பவனிவரப்போகிறார் என்றால் என்ன பொருள்?

"இந்த நாடு அடிமைக் காடு! இங்குள்ள மந்திரிகளைக் குதிரையாகப் பூட்டி அதிகாரக் கோச்சில் ஏறி வடவர் தலைவர் இராசேந்திரர் இங்கு பவனி வருகிறார் என்பதுதானே!

"இந்த அடிமை நிலை மாள வேண்டும் என்பதற்காகப் பாடுபடும் தி. மு. கழகம், தனது பாசறைகளில் ஒன்றாக சட்ட சபையையும் தேர்ந்தெடுத்திருக்கிறது.

"உடனே இங்குள்ள ஆளவந்தார்கள், 'நாடகமாடிகளாயிற்றே! இவர்கள் நாடானலாமா!" என்று கேட்கின்றனர்.

"நாங்கள் நாடகமாடிகள்தான்; ஆனால், என் நாடகமாடுகிறோம்? திராவிடச் சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள இழிவை நீக்க—அவர்களது அடிமைத்தனத்தை ஒழிக்க நாங்கள் நாடகமாடுகிறோம். நாடகமாடுவோர் நாடாளக்கூடாதா? சட்ட சபை ஆண்டு விழாவில் உறுப்பினர்களோடு சேர்ந்து மந்திரிகளும், கவர்னரும நாடகமாடவில்லையா? பிருதிவிராஜ் கபூர் என்ற நடிகரை மக்கள் சபை உறுப்பினராக்கி அழகு வைத்துக்கொண்டார், எங்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்பது?

"காமராசர் குருவாக ஏற்றுக்கொண்டிருந்த சத்திய மூர்த்தியும், முதுபெரும் கிழவர் பிரகாசம்காருவும் நாடகமாடியிருக்கிறார்களே! அப்படியிருக்க, நாங்கள் நாடகமாடிகள் என்று கூறி, 'நாடாளத் தகுதியற்றவர்கள்' என்று புலம்புவது என்ன நியாயம்?

"சட்டசபைக்கு வந்தால் நாங்கள் என்ன, அங்குமா நாடகம் ஆடிக்கொண்டிருப்போம்?

"சட்டசபை ஆண்டு விழாவில் வேஷம் போட்டுக் கொண்டு ஆடிய இந்தப் பகல் வேஷக்கார ஆளவந்தார்கள்தான் இப்படி கழகத்தை இழித்தும் பழித்தும் பேச முற்பட்டிருக்கிறார்கள்.

"இந்த ஆளவந்தார்கள், கடந்த ஒன்பதாண்டுக் காலத்தில் என்னென்ன செய்தார்கள் என்பதை நாட்டு மக்கள் அறியச் செய்யத்தானே நாங்கள் சட்டசபைக்குச் செல்கிறோம்; அந்தக் கிலியால்தானே இவர்கள் இன்று பிதற்றித் திரிவது?

"இந்த அகிம்சாமூர்த்திகள் ஆட்சியில் கடந்த ஒன்பதாண்டுக் காலத்தில் மட்டும் துப்பாக்கிப் பிரயோகங்களின் எண்ணிக்கை 100; அந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களுக்குப் பலி கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை 1000; காயம்பட்டோர் எண்ணிக்கை 8000! இது, இந்த காந்திசீடர்களின் அகிம்சா ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்களின் விளைவு!

"ஜெனரல் டயர் என்ற வெள்ளைக்காரனாவது, 1,600 ரவுண்டு களதான் மொத்தம் சுட்டான், பஞ்சாபில்! ஆனால், பம்பாய் முதல்வர் மந்திரி மொரார்ஜி தேசாய், 2,500 ரவுண்டுகள் சுட்டிருக்கிறார் பம்பாயில்! மொரார்ஜியைவிட டயர் துரை மேலாகத் தெரிகிறதே!"

—என்று தோழர் மு. கருணாநிதி அவர்கள், சென்னை பெத்தநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றத்தின் சார்பில், 11—8—56-ல் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத்தில் அண்ணா

20—8—56 மாலை 3 மணியளவில், கொளத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், அண்ணா அவர்கள் காந்தியார் உருவப் படத்தைத் திறந்து வைப்பார்கள்.

பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

அவர்களுக்கு

★

வேலூர் (சேலம்)

ஊராண்மைக் கழக வரவேற்பு

20—8—56 மாலை 4-மணிக்கு, வேலூர் (சேலம்) ஊராண்மைக் கழகத்தின் சார்பில், ஊராண்மைக் கழகக் கட்டிடத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதென 14—8—56-ல் நடைபெற்ற ஊராண்மைக் கழகக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நில வெளியேற்ற தடை மசோதா!

சென்னை சாகுபடியாளர் பாதுகாப்பு (திருத்த) மசோதாவை, 15 பேர் கொண்ட பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்புவதென சென்னை சட்டசபை தீர்மானித்திருக்கிறது.

நிலத்திலிருந்து சாகுபடியாளர்களை வெளியேற்றுவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பை, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்குத் திருத்த மசோதா வகை செய்கிறது.

சுதந்திர தினத்தில் சோகச் சம்பவம்

'கொண்டாடக்கூடாது' என மக்கள் கட்டளை

மீறிய காங்கிரஸ் தலைவர் அடித்துக் கொல்லப்பட்டார்

புனே, ஆக. 16—

மேற்கு காண்டேஷ் மாவட்ட காங்கிரஸ் குழு செயலாளரான எம். எம். பாவாஸ் என்பவர், தாயுலாய் என்ற இடத்தில் சுதந்திர தினத்தையொட்டி ஒரு காங்கிரஸ் கூட்டம் கூட்ட முயற்சித்தார்; ஆனால், அவ்வாறு கூட்டம் கூட்டக் கூடாது என்றும் கூட்டினால் பயங்கரமான விளைவு ஏற்படும் என்றும் அங்குள்ள மராட்டிய பொது மக்கள் பாவாஸ் அவர்களை எச்சரித்தனர். மக்கள் எச்சரிக்கையை மதிக்காது, கூட்டம் கூட்டப் பிடிவாதமாக அவர் முயற்சித்தார். அது கண்டு ஆத்திரமடைந்த மக்கள், பாவாஸ் அவர்களைத் தடியினால் பலமாகத் தாக்கிவிட்டனர். அதன் பலனாக அவர் இறந்துவிட்டார் என மாராட்டிர காங்கிரஸ் குழு அறிவித்திருக்கிறது.

சம்பந்த மாராட்டிர எதிர்க்கட்சி காங்கிரஸ் துரோகம் செய்துவிட்டதாகவும், அதனால் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு எந்தவித உரிமையும் கிடையாது எனவும் பாவாஸ் அவர்களிடம், அங்குள்ள மக்கள் எடுத்துக் கூறியதாகத் தெரியவருகிறது.

அந்த எச்சரிக்கையை மீறி, கூட்டம் முடித்துவிட்டு திரும்பும் பொழுது, அவரை பலர் சூழ்ந்து கொண்டு பலமாகத் தாக்கினதாகச் சொல்லப்படுகிறது.

அனுமந்தையா தோல்வி

மைசூர் முதலமைச்சராக மஞ்சப்பா தேர்வு

பெங்களூர், ஆக. 16—

மைசூர் காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவர் பதவியை கே. அனுமந்தையா இன்று ராஜினாமாச் செய்தார்.

அவரது ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திற்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சிச் செயலாளர் கே. பி. மாதவன் நாயர் தலைமை வகித்திருக்கிறார்.

இப்போது செனினியு பொது மராமத்து இலாகா மந்திரியாகவுள்ள மஞ்சப்பா புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ராஜினாமாச் செய்த கே. அனுமந்தையா, மீண்டும் தலைவர் தேர்தலுக்கு நின்று, மஞ்சப்பாவிடம் தோல்வி கண்டார் என்று கூறப்படுகிறது.

ஆந்திர கவர்னரின் உரை குறித்த சென்னை நிதி மந்திரியின் விமர்சனம்

ஆந்திர சட்டசபை எதிர்க்கட்சியினர் கண்டனம்

கர்னூல், ஆக. 16—

ஆந்திர கவர்னர் சட்டசபையில் நிகழ்த்திய உரையில், எல்லைத் தகராறு குறித்து அறிவித்திருந்த கொள்கையை சென்னை நிதிமந்திரி சட்டசபையில் கண்டித்துப் பேசியது நினைவிலிருக்கலாம்.

'அப்படி சென்னை நிதிமந்திரி பேசியது தவறானது—கண்டிக்கத் தக்கது; ஒரு மாநில கவர்னரின் உரையை இன்னொரு மாநில மந்திரி கண்டித்துப் பேசுவது அபத்தானது' என்று, ஆந்திர சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொந்தளித்திருக்கிறார்கள்.

ஆந்திர சட்டசபையின் கௌரவத்தைக் காப்பாற்றுமாறு கோரி தீர்மானம் ஒன்று கொண்டுவந்திருக்கிறார்கள்.

'ஆந்திர கவர்னர் பேசியது எந்த வகையாலும் தவறானதல்ல' என்று கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் ஒருவர் பேசியிருக்கிறார்.

முதல் மந்திரி சேபாலசெட்டி, மறுநாள் பதில் உரையாற்றக் கூறினாராம்.

நம் நாடு

தி.மு.கழகன் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 17—8—'56 வெள்ளி

அரசியல் சங்கராச்சாரியார் அழுகை!

இந்தியத் துணைக் கண்டத்துக் காங்கிரஸ் தலைவர்களில் முதுகிழவர்களாக இருந்துவருகின்ற சில தலைவர்களில் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களும் ஒருவர் ஆவார். அவரை, மேதை, மூதறிஞர், சகலகலா வல்லவர் என்றெல்லாம், அவரிடத்துப் பற்றும் பாசமும் கொண்டிருக்கின்றவர் சிறப்பித்துக் கூறி வருகின்றனர்.

அவரைக் குறித்து அவரைச் சேர்ந்த மற்றவர் புகழ்ந்து பாராட்டிக் கூறுவது ஒரு பக்கம் இருக்க, அவரேகூடத் தம்மைக் குறித்து அளவு கடந்து உயர்வாக மதித்துக்கொண்டு இருக்கிறார். அத்தகு உயர் நினைப்பு, தம்மைத் தாமே ஒரு 'அவதாரம்' என எண்ணிக் கொள்வதுடன் நில்லாது, வெளிப்படையாகத் தம்மைத் தாமே பறைசாற்றிக்கொள்ளும் எல்லைக்கும் ஆச்சாரியார் அவர்களைக் கடத்திச் சென்று இருக்கிறது.

ஆச்சாரியார் அவர்களிடம் காணப்படும் அறிவு அளவிற்கு, அவரிடம் தன்னடக்கம் அறவே கிடையாது. ஆணவத்தின் ஊற்றுக்காலாக அவர் காட்சி அளிக்கிறார்.

அவருக்குள்ளதாகச் சொல்லப்படும் அறிவு அளவிற்கு, மற்றவர்களை மதித்து நடந்து கொள்ளும் விரிந்த நெஞ்சம் அவருக்கு அறவே கிடையாது.

தமக்கு இருப்பதாகத் தம்மாலேயே வெளிப்படையாகக் கூறிக்கொள்ளும் அறிவு அளவிற்கு, ஆச்சாரியாரிடம், சமத்துவ உணர்ச்சியோ, சகிப்புத் தன்மையோ இடம் பெற்றிருக்கவில்லை.

தானென்ற அகந்தை, குறுகிய ஜாதி உணர்வு, பிறருக்கு இன்னல் சூழ்ந்து அகமகிழும் அற்பபுத்தி, அதிகாரவெறி, மற்றவர் உரிமையைக் குலைத்து சுய ஜாதியினரின் சுகபோகத்திற்குப் பலம் பொருந்திய பாதுகாப்புத் தேட வேண்டும் என்ற குணக்கேடு ஆகியவை சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் குணச்சித்திரமாகும்.

ஆச்சாரியார் அவர்களின் ஒவ்வொரு சொல்லும் செயலும், சொந்த சாதியினரின் நல்வாழ்விற்கு வழிவகை தேடும் குறிக்கோளைக் கொண்டுள்ளவையாகும். அக்குணக்கேட்டின் காரணமாகத்தானோ என்னவோ, அவர், தம்மைத் தாமே ஒரு 'அவதாரம்' எனக் கருதிக்கொள்கிறார் — கூறிக் கொள்கிறார் போலும்!

பிறப்பினால் மக்களைப் பிரித்து வைக்கும் சனாதனம், வருணாசிரம தர்மம், வியாசர் வகுத்த வழி, வெறுத்து ஒதுக்கத்தக்கது —கண்டித்து ஒழிக்கத் தக்கது.

அதை எதிர்த்துப் போர் தொடுக்க வேண்டியது, சமத்துவம் கோரும் ஒவ்வொருவருடைய நிங்காக் கடமையாகும். அப்புனிதப் பணியை— சமத்துவத்தை நிலைநாட்ட மேற்கொள்ளும் தூயப் பணியை மேற்கொள்ள மனந்துணியாது இருப்பவர் எவராயினும், அவர் எத்தகு உயர் நிலையில் இருப்பவராயினும், அவர் எள்ளிநகையாடத்தக்கவர். அவர் சமத்துவத்தின் வைரி எனக் காறி உமிழத்தக்கவராவார்.

ஆச்சாரியார் அவர்கள் சமத்துவ நெறியைக் காணப் பணியாற்ற முன்வராதவர் மட்டுமல்ல; அவ்வாறு பணியாற்றுவதைக் கூடாது என்பவர். அந்த அளவுடன் இருந்துவிடுபவருமல்ல.

அதற்கு மேலும் சென்று சமத்துவத் தூதுவர்களை 'துவேஷிகள்—பகை மூட்டும் பாவிகள்—குரோத புத்தியினர்' என இழித்துக்கூறும் கெடுமதி கொண்ட சாதித் திமிர்பிடித்த பார்ப்பனக் குடிமகனாவார்.

சனாதனத்தின் சமாதியின் மீதுதான் சமத்துவ மாளிகையை நிர்மாணிக்க முடியும் என்பது ஒப்பமுடிந்த உண்மையாகும்.

சனாதனத்தைச் சாடுவது, வருணாஸ்ரமத்தை வீழ்த்த முயற்சிப்பது, வியாசன் வகுத்த வழியை வெட்டி எறிய முன்வருவது, ஆச்சாரியாருக்குத் துவேஷப் பிரச்சாரமாகப்படுகிறது—குரோதப் பேச்சாகத் தெரிகிறது—பகை மூட்டும் பாதையாகத் தென்படுகிறது!

பிறப்பினால் உயர்வு தாழ்வு பேசிவந்தவர்களை, பேதமே வேதன் கட்டளை என எழுதி வைத்தவர்களை, அவ்வேற்றுமையைக் கையாண்டு வந்தவர்களை, அதைக் காப்பதற்கே தாங்கள் வாழ்கிறோம் என ஆச்சாரியார் போன்று கருதிக் கிடப்பவர்களை எந்தப் பெயரிட்டழைப்பது? கொலைஞர்கள் என்பதா? கொலையினும் கொடியவர்கள் என்பதா?

'நான் உயர்ந்தவன்—அவன் தாழ்ந்தவன்'; 'நான் பூசுரன் —அவன் சூத்திரன்' என்ற நச்சுக் கருத்தை, வேதம், இதிகாசம், புராணம் என எழுதி வைத்து, அவைகளைப் புனித நூற்கள் எனப் பிதற்றித திரியும் புல்லர்களை, மனித குல விரோதிகள் எனக் கூறுவதில் குற்றம் என்ன?

'குறிப்பிட்ட ஒரு வகுப்பாருக்கு எதிராகத் துவேஷப் பிரச்சாரம் நடைபெறுகிறது. அது ஒரு நாளைக்கு எரிமலையாக வெடிக்கப்போகிறது. அதை காலாகாலத்தில் ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும்' எனச் சுதந்திர தினத்தில் எச்சரிக்கை விடுகிறார், சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் என்கிற அரசியல் சங்கராச்சாரியார்!

'துவேஷப் பிரசாரத்தைச் செய்தித் தாள்கள் தினமதினம் பரப்பி வருகின்றன. இளைஞர்கள் இலகுவாக அதற்குப் பலியாகிவிடுகின்றனர்' என்றும் அரசியல் ஆதீனகர்த்தா அங்கலாய்க்கிறார்!

"அங்கும் இங்குமாக இருக்கும் சிறுசிறு நிலப் பரப்புகளைக் கேட்டு சண்டையிடுவதா? அது, எங்கு இருந்தால் என்ன?" எனக் காமராசரைப் பின்பற்றி, முகாரி வைக்கிறார் அரசியல் ஆரிய முனிவர்!

மக்கள் குலத்தை, மிக உயர்ந்தவர்—சிறிதளவு உயர்ந்தவர்—தாழ்ந்தவர்—அதிகம் தாழ்ந்தவர் எனப் பல்வேறு வகையாகப் பிரித்துவைத்து எழுதிய ஏடுகளை ஆண்டவன் தந்தவை என்கின்றனர்; பரமன் தீட்டியவை என்கின்றனர்; புனிதமான அறநூல்கள் என்கின்றனர், ஆச்சாரியாரும் அவர் வழிவந்த அரசியல் அதிகார, சாதித் திமிர்பிடித்தவர்களும்.

புனித ஏடுகள் எனக் கூறப்படும் அவ்வேற்றுமை ஏடுகளில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களில் குழைத்துக் கொடுக்கப்பட்டு இருக்கும் மனித குல விரோதக் கருத்துக்களை விடவா, சமத்துவம் கோருபவரின் ஏடுகளில் காணப்படும் எழுத்துக்கள் துவேஷமுடையனவாகும்? குரோதம் வளர்ப்பனவாகும்?

சமத்துவ முழக்கத்தைக் குரோத வசைமொழி என, நடுநிலை வழிநடக்கும் நல்லறிவாளன்—உயர் பண்பாளன் எவனும் கூறான்!

ஆனால், ஆச்சாரியார் கூறுகிறார், சமத்துக் கோரிக்கையை துவேஷப் பிரசாரம் என்று!

பகுத்தறிவை — சமத்துவ உணர்வை—சமதர்ம நெறியை ஆரிய சதியால் சாய்த்துவிட்டு, வேற்றுமையை அரியாசன மேற்றி, தம் சந்ததியினருக்கு மீண்டும் நல்வாழ்வு தேடித்தரும் ஆச்சாரியாரின் கயமைக்குணம் வெற்றி முரசு கொட்டுவதற்கு இது புத்தர் காலமல்ல! புது யுகம்—இது!

உழாமல், விதைக்காமல், நீர் பாய்ச்சாமல், களையெடுக்காமல் கிடைத்துவந்த பெருமையும், உயர் வாழ்வும் தம் சுற்றத்திடமிருந்து பறிபோவது கண்டு, அரசியல் சங்கராச்சாரியாரான ஆச்சாரியார் அலறிப் புடைக்கிறார்! உண்ட உருசி, அனுபவித்த சுகம், ஆச்சாரியாரின் வேதனையை அதிகமாக்குகிறது. எனவே, தோல்வியால் அவருக்கு ஏற்பட்டுள்ள வேதனையைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், அத்துன்பத்திற்குக் காரணமாக இருக்கும் சமத்துவ பிரச்சாரத்தைச் சாட முனைகிறார் ஆச்சாரியார்! அரசியல் சங்கராச்சாரியார் அழட்டும்—உடலில் தெம்பு இருக்கும் வரையில் அழட்டும்!

மக்கள்சபை நகர சபைஉறுப்பினர் பலர் இராஜிநாமா

இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு எதிர்ப்பு

பரோடா, ஆக. 14—

டாக்டர் இந்துபாய் அமீன் என்ற மக்கள் சபை உறுப்பினர் இரு மொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்துத் தனது பதவியைத் துறந்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

வாசோ நகரசபையின் எல்லா உறுப்பினர்களும் தங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்துவிட்டதற்கும் இதுவே காரணம் எனத் தெரியவருகிறது.

முன்னறிவிப்பு?

"எக்காரணம் கொண்டும் ஆயுத பலத்தாலோ, பயமுறுத்தல்களாலோ சூயஸ் பிரச்சினையைத் தீர்க்க முயலக்கூடாது; அம்மாதிரி தவறுதலாகக்கூட ஏதேனும் செய்ய முற்பட்டால், அதனால் விபரீத விளைவுகள் ஏற்பட்டு, ஒரு யுத்தம் மூண்டு, உலகம் முழுவதிலும் அது பரவக் கூடும்."

என்று, பண்டித நேரு, டில்லி செங்கோட்டையில், 'சுதந்திர தின'க் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

1955—56-ல் இந்திய சணல் சரக்குகள் ஏற்றுமதி மூலம் ரூ. 118 கோடி மதிப்புள்ள அன்னிய நாணயச் செலாவணி கிடைத்திருக்கிறது.

'சுயநலக்காரர்கள் அம்பலப்படுத்தப்படுவர்'

'மக்களிடம் ஓட்டுக் கேட்க செல்வது எப்படி?'

'நெருக்கடி எனக்கு மட்டுமல்ல; எல்லாசட்டசபை உறுப்பினருக்கும்தான்'

பறிக்கப்படும் பதவி குறித்து அனுமந்தையா

பெங்களூர், ஆக. 15—

"இப்போது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி எனக்கு மட்டுமின்றி எல்லா சட்டசபை உறுப்பினர்களுக்கும் ஒரு சோதனையாகும்,"

என்று, மைசூர் முதன் மந்திரி, மாணவர் கூட்டம் ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மாநிலத்தின் அரசியல் நெருக்கடி குறித்துத் தினம் எனக்கு நூற்றுக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. பொது இடங்களிலும், கிராமக் கூட்டங்களிலும் நெருக்கடி குறித்த பேச்சுக்களே நடைபெறுகின்றன.

"ஏழு மந்திரிகள் மட்டுமல்ல நெருக்கடிக்கு ஆளாகியிருப்போர்; எஞ்சிய 80 சட்ட மன்ற உறுப்பினர்களும்கூடத்தான்! விவேகமும் தூரதிருஷ்டியும் இல்லாதவர்கள் நெருக்கடி தங்களைப் பாதிக்கவில்லை என்று கருதலாம்; அது, ஒரு இரயில் கவிழும்போது டிரைவர் மட்டுமே ஆபத்துக்கு ஆளாவான்; இதரர்கள் ஆளாகமாட்டார்கள்' என்று கருதுவதற்கு ஒப்பாகும்!

"சுயநலன்களுக்காக நாட்டுக்கு அழிவு தேடும் வகையில் நடந்துகொள்ளுபவர்கள் சீக்கிரமே அம்பலப்படுத்தப்படுவார்கள்; இந்தச்சோதனையில், எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் வெற்றிகரமாகத் திரும்ப வேண்டுமே என்று ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக!

"பல சமயங்களில், இதுபோன்று தவறாகப் புரிந்துகொள்வது, புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள சண்டையைப் போன்றது என்று கூறப்படுகிறது; அப்படியானால், இந்தச் சண்டை இரகசியமாக அல்லவா இருந்திருக்கவேண்டும்? ஆனால் இந்தச் சண்டை, ஒவ்வொருவருடைய பேச்சிலும் அல்லவா அடிபடுகிறது?

"மைசூர் அரசியல் நெருக்கடி, ஒரு கணவனுக்கும்—மனைவிக்கும் இடையேயுள்ள சண்டைக்கு ஒப்பிட முடியாதது.

"ஓட்டுக்காக மக்களை அணுகும் போது அவர்களிடம், தாம் இதுவரை என்ன செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லியாக வேண்டும். 'இரகசியமான முறையில் காங்கிரஸ் வேலைகளைக் கவனித்து வருகிறது' என்பதாக நாம் கூறினால், மக்கள் 'இரகசியமாக வேலை செய்பவர்களுக்கு நாங்கள் ஏன் ஓட்டளிக்கவேண்டும்?' என்று கேட்பார்கள். எனவே, இது ஒரு குடும்பத்தைப் பொறுத்த விவகாரமல்ல—இது ஒரு மாநிலத்தைப் பொறுத்த விவகாரமாகும். இது ஒரு சுயநலப் பிரச்சினையல்ல —இது ஒரு 'தர்மம்' பற்றிய பிரச்சினையாகும்.

"காங்கிசாராகிய நாம் நாட்டின் ஒரு பிரிவினர்தான்; நாம் ஒன்றும் சர்வாதிகாரிகளல்ல! மக்கள் விவேகமுடையவர்கள்! கற்றவர்கள்!

"இப்போது தோன்றியுள்ள அரசியல் நெருக்கடி எனக்கு எந்தவித ஆயாசத்தையும் தரவில்லை. நான் இப்போது செய்யக்கூடியது என்ன இருக்கிறது? நான் எதையாவது இழந்துவிடுவேன் என்றால் அது எனது மந்திரி பதவிதான்! எஞ்சிய மந்திரிகளும் பதவி இழப்பர்! எனவே, எவராவதுபோய் மக்களிடத்தில், 'நாங்கள் இவரைத் துரத்தினோம்; அவரை விரட்டினோம்' என்று பேசுவது, தர்மத்திற்கு ஒத்ததல்ல; நான் ஏமாற்றப்பட்டால் அது கவலைக்குரியதல்ல; நான் குற்றமற்றவன். ஏமாற்றப்படுபவர்கள், பின் எந்தவித தூஷணைக்கும் ஆளாகமாட்டார்கள்!

"ஒரு மனிதன் கஷ்டங்களுக்கிடையே யிருக்கும்போதுதான் அவன் மனத் திண்மையை உணர்ந்துகொள்ள முடியும். ஒரு மனிதன் வெற்றியில் திளைத்திருக்கும்போதுதான் அவனது பெருந்தன்மையை அளவிட முடியும்.

"எனக்கு எதிராகவோ ஆதரவாகவோ உள்ளவர்கள் அனைவரும் இந்தத் 'தர்ம சோதனை'யில் வெற்றி பெறவேண்டும் என விழைகிறேன்."

சீனப்படை குவிகிறது?

இரங்கூன், ஆக. 15—

வடபர்மாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் மூலம், திபேத்தை அடுத்துள்ள வடகோடி பர்மா எல்லையில், 6,000 சீனப் படைகள் குவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றனவாம். பர்மா எல்லைக்குள் 10-மைலுக்குள் அப்படைகள் ஊன்றிக்கொண்டதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

தீப்புண்ணுக்கு அவசர சிகிச்சை

வாஷிங்டன், ஆக. 16—

"தீப்புண்ணால் ஏற்படக்கூடிய அதிர்ச்சிக்குப் பயன்படும் அவசர சிகிச்சை உப்பும் சோடாவும் கலந்து, தண்ணீரை நிறையக் குடிப்பதாகும்" என்று, மருத்துவ விஞ்ஞானிகள் விளக்கிக்காட்டியுள்ளனராம்.

இரத்தம் அல்லது பிளாஸ்மாவை ஊசி மூலம் செலுத்துவது தான் வழக்கமான சிகிச்சை முறையாகும்.

தேர்ச்சி பெற்ற பராமரிப்போ அல்லது இரத்த பிளாஸ்மாவோ உடனடியாகக் கிடைக்காவிட்டால் ஒரு குவார்ட் (கால் காலன்) குடி தண்ணீரில் ஒரு தேக்கரண்டி உப்பும், பாதித் தேக்கரண்டி சமையல் சோடாமாவும் கலப்பது அவசரத்தில் பின்பற்றத்தக்க முறையாகுமென சுகாதார இலாகா அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

தீப்புண்ணால் அவதிப்படும் நபருக்கு புண் ஏற்பட்ட முதலாவது 12 மணி நேரத்தில் 6 அல்லது 7 குவார்ட் தண்ணீர் தேவைப்படும் என அவர்கள் கூறுகின்றனர்.

மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில், பல் வைத்திய சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான மாநில சர்க்கார் திட்டங்களுக்கு உதவி அளிப்பதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 151 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் அபிவிருத்தி என்பது வடநாட்டின் அபிவிருத்தியே!

சர்க்கார் தரும் புள்ளி விவரங்கள் இதனைத் தெளிவாக்குகின்றன

தகவல் இலாகாவின் சுதந்திர தினக் கட்டுரையில் சென்னையின் பெயரையே காணோம்!

'சுதந்திர தின விசேடக் கட்டுரை' என்ற தலைப்போடு, டில்லி தகவல் இலாகாவின் சென்னைக் கிளையினர் நமக்கு அனுப்பியுள்ள கட்டுரை ஒன்றின் சாரத்தைக் கீழே தருகிறோம். ஊன்றிப் படிப்போருக்கு 'இந்தியா'வின் அபிவிருத்தி என்பது வடநாட்டின் அபிவிருத்தியே தவிர தென்னாட்டின் அபிவிருத்தி என்பது மருந்துக்கும் இல்லை என்பது புலனாகாமற்போகாது.

'பல நூறு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர்த்தேக்க, மின்சார உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் வடக்கில் தான்; அவைதரும் பலனும் வடநாட்டவருக்குத்தான்', என்பதை சர்க்காரின் புள்ளி விபரங்கள் தெளிவாக்குவதைப் பாருங்கள்:

"முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெரிய—நடுத்தர திட்டங்கள் மூலம் பாசன வசதி விஸ்தரணம் 63 இலட்சம் ஏக்கரா அதிகரித்தது; 1950—51-ல் பாசன வசதி பெற்ற நிலப் பரப்பளவு 515 இலட்சம் ஏக்கரா; சிறிய பாசனத் திட்டங்கள் மூலம் 100 இலட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதி கிடைத்தது; முதல் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் முழுவதுமாக நிறைவேறும்போது அதிகப்படியாக 220 இலட்சம் ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்; முதல் திட்டத்தில் பாசன—மின்சார ஏற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 970 கோடி; அதில் பாசனத்துக்கென்று ரூ. 720 கோடி செலவிடப்பட்டது; திட்டத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான ரூ. 80 கோடி அதில் அடங்கும்,"

என்று, சுதந்திரத் தினத்தை யொட்டி இந்திய சர்க்கார் செய்தி இலாகா வெளியிட்டுள்ள விசேடக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரம்

1950—51-ல், 657·5 கோடி கிலோவாட் மணியாக இருந்த மின்சார உற்பத்தி 1955—56-ல் 1,100 கோடி கிலோவாட் மணியாக அதிகரித்துவிட்டது; உற்பத்தி சக்தி முன்பு 23 இலட்சம் கிலோவாட்டாக இருந்தது—பிறகு 34 இலட்சம் கிலோவாட்டாக அதிகரித்திருக்கிறது.

பாசனத் திட்டங்கள்

இரண்டாவது திட்டத்தில் புதிதாக 195 பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். முதல் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடத்தப்படுகிற திட்டங்கள் இதில் அடங்கவில்லை. இரண்டாவது திட்டத்தில் பெரிய—நடுத்தர பாசன ஏற்பாடுகளுக்காக மொத்தம் ரூ. 381 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதில், ரூ. 299 கோடி ஏற்கனவே முதல் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடத்தப்படுகிற ஏற்பாடுகளுக்கானது.

புதிய 195 திட்டங்கள் மூலம் அதிகப்படியாக 120 இலட்சம் ஏக்கரா பாசன வசதி பெறும்; சிறிய திட்டங்கள் மூலம் தனிப்பட 90 இலட்சம் ஏக்கரா பாசன வசதி பெறும். 1961-ல் தேசத்தில் பாசன வசதியுள்ள நிலப் பரப்பளவின் மொத்த அளவு 880 இலட்சம் ஏக்கராவாகும்.

ரூ. 427 கோடி செலவு மதிப்புள்ள 44 மின்சாரத் திட்டங்கள் இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன; அவை மூலம், மின்சார உற்பத்தி சக்தி 35 இலட்சம் கிலோவாட் பெருகும்; அதாவது, 1961-ல் மொத்த உற்பத்தி சக்தி 69 இலட்சம் கிலோவாட்டாகும். மின்சார விசை உற்பத்தி 1960—61-ல் 2,200 இலட்சம் யூனிட் ஆக இருக்கும்; 1955—56-ல் அது 1,100 இலட்சம் யூனிட்.

இரண்டாவது திட்டத்தில் நடுத்தர நீர்ப் பாசனத் திட்டங்கள்தான் விசேஷமாய் மேற்கொள்ளப்படுகின்றன. மொத்தம் 195 திட்டங்களில் ரூ. 10—30 கோடி செலவுள்ள திட்டங்கள் 10 தான்; ரூ 5—10 கோடி செலவுள்ளவை 7; மீதியெல்லாம் ரூ. 5 கோடிக்கும் குறைவான செலவுள்ள திட்டங்கள். ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் ரூ 172 கோடி திட்ட காலத்தில் செலவிடப்படும்; மீதி, பிற்றியத் திட்டங்களில் செலவிடப்படும்.

புதிய திட்டங்களில் பம்பாயில் உகாய், கடக்வாஸ்லா, நர்மதா (17,75,000 ஏக்கர்), மத்தியப் பிரதேசத்தில் தாவா (5,90,000 ஏக்கர்); ஐதராபாத்தில் பூர்ணா (1,57,000 ஏக்கர்); ஆந்திராவில் கம்சதாரா (3,60,000 ஏக்கர்); மேற்கு வங்காளத்தில் கங்சபாதி (9,50,000 ஏக்கர்); இராஜஸ்தானில் பாணஸ் (2,50,000 ஏக்கர்); சௌராஷ்டிராவில் பதார் (90,000 ஏக்கர்); திரு-கொச்சியில் பூதத்தான்கட்டு (63,000 ஏக்கர்) — ஆகிய திட்டங்கள் அடங்கியிருக்கின்றன.

பாசன இலட்சிய அளவுகள்

இரண்டாவது திட்டத்தில் 120-இலட்சம் ஏக்கரா நிலம் பாசன வசதி பெறவேண்டுமென்பது இலட்சிய அளவு; புதிய திட்டங்கள் மூலம் 30 இலட்சம் ஏக்கரா பாசன வசதிபெறும். முதல் திட்டத்திலிருந்து தொடர்ந்து நடத்தப்படுகிற ஏற்பாடுகள் மூலம் 90-இலட்சம் ஏக்கரா பாசன வசதி பெறும். புதிய திட்டங்கள் இறுதியில் 150 இலட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதியளிக்கும்.

முதல் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாவது திட்டத்தில் முடிவடையவிருக்கிற முக்கியமான திட்டங்கள்:—

பஞ்சாபில் பக்ரா-நங்கல்; ஆந்திரா — ஐதராபாத் — மைசூரில் துங்கபத்ரா; ஒரிசாவில் இராகுட் (முதல் கட்டம்); மேற்கு வங்காளம்—பீகாரில் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்; மத்திய பாரத்—இராஜஸ்தானில் சம்பல் திட்டம் (முதல் கட்டம்); பீகாரில் கோசி (முதல் கட்டம்); பம்பாயில் கோயினா; உத்தர பிரதேசத்தில் ரிஹாண்ட்.

பக்ரா-நங்கல்

ரூ. 170 கோடி இத்திட்டத்துக்குச் செலவாகும்; சட்லெஜ் நதிக்குக் குறுக்கே 680 அடி உயர அணை கட்டப்படும்.

இரண்டு மின்சார நிலையங்கள், ஒரு டைவர்ஷன் அணை, நங்கல் நீர் மின்சாரக் கால்வாய், சுக்குவால், கோட்லாவில் இரண்டு மின்சார நிலையங்கள், பக்ரா கால்வாய்த் திட்டம் ஆகியவை இந்த ஏற்பாட்டில் அடங்கும்.

பக்ரா அணை இரு மின்சார நிலையங்கள், மின்சார மாற்று ஏற்பாடு ஆகியவை தவிர, இதர எல்லா அம்சங்களும் பூர்த்தியாகி விட்டன. இத்திட்டத்தின்மூலம் பஞ்சாப், பெப்சு ஆகிய பிரதேசங்களில் 30 இலட்சம் ஏக்கரா நிலம் பாசன வசதி பெறும்; 9,54,000 கிலோவாட் மின்சார உற்பத்தி சக்தி கிடைக்கும்.

துங்கபத்ரா:

துங்கபத்ரா திட்டத்தில் அந்நதிமீது ஒரு அணையும் இரு கால்வாய்களும் அமைக்கப்படும். 91,589 ஏக்கரா நிலம் மைசூரிலும், 1,56,913 ஏக்கரா நிலம் ஆந்திராவிலும், 5 80,000 ஏக்கரா நிலம் ஐதராபாத்திலும் இதனால் பாசன வசதி பெறும். அணைக்கருகில் மின்சார நிலையம் 1956 டிசம்பரில் முடிவடையும். அபிமின்சார நிலையம் 1957 ஏப்ரலில் முடிவடையும். மொத்த மின்சார உற்பத்தி சக்தி 63,000 கிலோவாட்.

இராகுட் அணை:

இராகுட் அணை 1956 ஆகஸ்டில் அநேகமாக முடிவடைந்துவிடும். 1,00,000 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்; 24,000 கிலோவாட் மின்சார சக்தி ஏற்படும்; இறுதியாக 1958—59-ல், 4 54,000 ஏக்காவுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்:

இத்திட்டத்தின் அங்கங்களான பிலையா, கோனர், துர்காப்பூர் அணைகளும், பொகாரோ மின்சார நிலையமும், கால்வாய்த் திட்டங்களும், மின்சார விநியோக மார்க்கங்களும் அமைக்கப்பட்டுவிட்டன; மைதான், பஞ்சட்ஹில் அணைகள் வேலை நடந்துவருகிறது. இவ்வருட இறுதியில் மைதான் அணை முடிந்துவிடும்; 1957—58-ல் பஞ்சட்ஹில் அணை முடிவடையும்.

நாகார்ஜுனசாகர்:

இது, பலநோக்கியத் திட்டம். 387 அடி அணை கிருஷ்ணா நதி மீது கட்டப்படும்; 84·02 இலட்சம் ஏக்காவுக்குப் பாசன வசதி கிடைக்கும்; 75,000 கிலோவாட் மின்சார சக்தி கிடைக்கும்.

கோசித் திட்டம்:

இதற்கான 150 மைல் வரை கட்டும் வேலையில் 114 மைல் வேலை பூர்த்தியாகிவிட்டது.

கோய்னாத் திட்டத்தில் 207·5-அடி உயர அணை கட்டப்படும்; 60,000 கிலோவாட் வீதம் சக்தியுள்ள 4 மின்சார நிலையங்கள் ஏற்படும்; திட்டச் செலவு மதிப்பு ரூ 40·44 கோடி.

நிகாண்ட் திட்டத்தில் ஒரு அணையும், 50,000 கிலோவாட் சக்தியுள்ள ஐந்து மின்சார நிலையங்களும் ஏற்படும்; 21 இலட்சம் ஏக்காவுக்குப் பாசன வசதி கிடைக்கும்.

சம்பல் திட்டம்:

சம்பல் திட்டத்துக்கு மூன்று அணைகளும், மூன்று மின்சார நிலையங்களும், ஒரு பாரேஜ் அணையும் கால்வாய்களும் அமைக்கப்பட வேண்டும். இறுதி கட்டத்தில் மின்சார உற்பத்தி சக்தி 2,10,000 கிலோவாட் உண்டாகும்; 14 இலட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். முதல் கட்ட வேலை நடந்துவருகிறது.

மின்சாரத் திட்டம்

மின்சாரத் திட்டம் நீண்டகால அடிப்படையில் நடக்கவேண்டும். முதல் திட்டத்தில் 15 வருட காலத்தில் 70,000 கிலோவாட்-மின்சார சக்தி அதிகப்படியாய் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தேவை அதிகரிப்பை உத்தேசித்து அது 150 இலட்சம் கிலோவாட்டாக அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

திட்டத்திற்கு ரூ. 427 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதில், ரூ 235 கோடி மின்சார உற்பத்திக்கும் ரூ 92 கோடி டிரான்ஸ்மிஷனுக்கும், ரூ 25 கோடி கிராம விநியோகத்துக்கும், ரூ. 75 கோடி கிராம மின்சாரத்துக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்டத்தில் 10,000 மக்களுள்ள கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் மின்சாரத்தைப் பரவலாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

20,000 மக்கள் தொகையுள்ள 585 நகரங்களில், 550 நகரங்கள் முதல் திட்டத்தில் மின்சார வசதி பெற்றுவிட்டன.

20,000 வரை மக்கள் தொகையுள்ள அதேசமயம் 350 நகரங்கள் மின்சார வசதி பெற்றுள்ளன.

எல்லா இந்திய கிராமங்களுக்கும் மின்சாரத்தைப் பரவலாக்க வேண்டுமானால் ரூ. 8,000 கோடி ஆகும்; அது பொறுப்புக்கு மீறிய செலவு. எனவே, கட்டம் கட்டமாக மின்சார வசதி பரவலாக்கப்படும்.

இரண்டாவது திட்டத்திலுள்ள பாசன—மின்சார இலட்சிய அளவுகள் பூர்த்தியானால் உணவு உற்பத்தி 100 இலட்சம் டன் அதிகரிக்குமாம்! மின்சார அபிவிருத்தி, தொழில்கள் அதிவேகமாக இருக்குமாம்!

ஆவணத்தாங்கோட்டையில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

தி. மு. கழக ஆண்டு விழாவில் இலட்சிய விளக்கம்

9—8—56 மாலை 6½ மணிக்கு, தோழர் நா. மாரிமுத்து தலைமையில் கழக முதலாவது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். இளங்கோ, சதாசிவம், அடைக்கலம், கலாசேசன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பின்னர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தற்கால அரசியல் பற்றியும், தி. மு. கழகம் தேர்தலில் இறங்குவதைக் கண்டு முதல் மந்திரி காமராசர் அவர்கள் தி. மு. கழகத்தைப் பற்றி பேசிவரும் நோக்கத்தைப் பற்றியும், ஒவ்வொரு இடத்திலும் தி. மு. கழகம் அமைவதின் நோக்கத்தைப் பற்றியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

கூட்ட இறுதியில், 'புயல் நிவாரணக் கடன்' சம்பந்தமான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. (ந. நி.)

அண்ணா

சுற்றுப்பயணம்

ஆக. 19: காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20: காலை-சேலம்
மாலை-குளத்தூர்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 18: சின்னத்தம்பி பாளையம்
19: காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20: காலை-சேலம்

தேர்தல் நிதி அனுப்புவோர் கவனிக்க:

தி. மு. கழக தேர்தல் நிதிக்கு பணம் அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13' என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. நிலைய நிலையம்

புலியங்குடி தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் சம்பத், எஸ். முத்து

கைத்தறிக்கு இழைக்கப்படும் அநீதிக்குக் கண்டனம்

வடவரின் ஓரவஞ்சனை பற்றி விளக்கம்

10—8—56 இரவு 7 மணியளவில் நகர தி. மு. கழகச் சார்பில், வள்ளியம்மை திடலில் தோழர் டி. கே. மூர்த்தி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் வேலன், சி. முத்துசாமி, டாக்டர் பி. சேதுராசு, மதுரை எஸ். முத்து ஆகியோர் தி. மு. கழக 2வது மாநில மாநாட்டின் 33-வது தீர்மானமாகிய தி. மு. கழகம் தேர்தலில் கலந்துகொள்வது என்ற தீர்மானத்தைக்கண்டு காங்கிரஸ் தலைவர்கள் பிதற்றித் திரியும் போக்கையும், தமிழ் மொழிக்கு இழைக்கப்படும் அநீதியையும், டில்லி சர்க்காரின் ஏதேச்சாதிகாரப் போக்கையும், விசைத் தறியினால் கைத்தறிக்கு இழைக்கப்படும் அநீதியையும் கண்டித்துப் பேசினர்.

பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பொருளாதாரத் துறையில் திராவிடம் பின்தங்கிக் கிடந்தும், ஐந்தாண்டுத் திட்டத்தில் திராவிடத்திற்குத் தகுந்த பணம் ஒதுக்காத வடவரின் ஓர வஞ்சனை ஆட்சியைக் கண்டித்து வீண்டதோர் சொற்பெருக்காற்றினார். (ர. கி.)

இராமநாதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட்டம்

12—8—56 பிற்பகல் 3 மணிக்கு, விருதுநகர் காடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் இல. ம. சவுந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. 22 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இருவர் கடிதம் மூலம் ஒப்புதல் தெரிவித்திருந்தனர்.

10—4—55 முதல் 11—8—56 முடிய உள்ள காலத்தில் நடைபெற்ற மாவட்டக் கிளையின் வேலைகள் குறித்த மாவட்டச் செயலாரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, 31—12—55 முடிய உள்ள காலத்திற்கும், 1—1—56 முதல் 31—7—56 முடிய உள்ள ஏழு மாத காலத்திற்கும் மாவட்டச் செயலாரால் தனித் தனியே சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுக் கணக்குகள் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

14—8—55ல் அருப்புக்கோட்டையில் பொதுச்செயலாளருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புச் செலவில் பாதியை மாவட்டக் கிளையும், மற்றொரு பாதியை அருப்புக்கோட்டை நகரக் கிளையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும், 2-வது மாநில மாநாட்டின் தீர்மானங்களை அச்சிட்டு கிளைகளுக்கு அனுப்பி தீர்மானங்களை கடைமுறைக்குக் கொண்டுவருமாறு கிளைகளைக் கேட்டுக்கொண்டும், திருவில்லிப்புத்தூர் வட்டக் கிளையின் வேண்டுகோளுங்கிணங்க, இராமநாதபுரம் மாவட்டத் தி. மு. க. மூன்றாவது மாநாட்டைத் திருவில்லிப்புத்தூரில் டிசம்பர் திங்களில் கடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 4,39,56,000 மனங்கு உருளைக் கிழங்கு உற்பத்தியாகிறது.

சேலம் சிறப்புக் கூட்டத்தில் அண்ணு

20-8-56 காலை 10-மணிக்கு, அம்பிகா டாக்கீசில், தோழர் என். முத்துசாமி தலைமையில், சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும்.

அண்ணு அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் பேசுவர்.

நன்கொடை : சூ. 1, அனு 8.

சிறப்பு சொற்பொழிவு கூட்டத்தில்

ஈ. வெ. கி. சம்பத்

19-8-56 காலை 9-30 மணிக்கு சென்னை — வண்ணை தியாகராயர் கல்லூரியில், கல்லூரி நுண்கலை மன்றச் சார்பில் நடைபெறும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை : சூ 1, அனு 8.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஆக. 19 : காலை — பேளுக்குறிச்சி;
மாலை—ஈரோடு
20 : காலை—குன்னத்தூர்
மாலை—பொத்தனூர்
21 : ஏ. மேட்டூர்
22 : விழுப்புரம்

குமாரசாமி இராஜா

கவர்னர் பதவியிலிருந்து விலகினர்

புதியகவர்னராக சச்சார் நியமனம்

புதுடில்லி, ஆக. 16—

ஒரிசா கவர்னராக இருக்கும் பி. எஸ். குமாரசாமி இராஜா உடல் நலக் குறைவினல் பதவியை இராஜிநாமாச்செய்து விட்டாராம்.

அதனல் அவருடைய இடத்திற்கு பஞ்சாபின் முன்னன் முதன மந்திரி பிம்சேன் சச்சார் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று குடியரசுத் தலைவர் மாளிகை அறிக்கை ஒன்று கூறுகிறது.

வரும் செப்டம்பர் திங்களில் சச்சார் பதவி ஏற்பார் என்று தெரியவருகிறது.

சென்னை மாநில நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள்

நிட்டக் குழு கருத்து

புதுடில்லி, ஆக. 16—

சென்னை ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர், தனது மாநிலத்தின் நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் குறித்தது—குறிப்பாக நியாய வாரமசோதா குறித்து மத்திய நிலச் சீர்திருத்தக் குழுவினருடன் விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

சென்னை சட்டசபை பொறுக்குக் குழுவினர் மாநில நியாய வாரமசோதாவில் குறிப்பிட்டுள்ளபடி, மகசூலில் 60 சத விகிதம் விவசாயிக்கும், 40 சத விகிதம் நிலப் பிரபுவிற்கும் தருவது என்ற முடிவுக்கு எப்படி வந்தனர் என்பதை மாணிக்கவேலர் விளக்கினராம்.

'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், நிலச் சீர்திருத்த நடவடிக்கையாக மகசூலில் 20 முதல் 25 சத விகிதம் வரையிலுமே நிலச் சுவான்தார்களுக்குத் தரலாம்' என்று நிட்டக் குழு முடிவு கட்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பரோடாவில் தடியடி

பரோடா, ஆக. 15—

இரு மொழி பம்பாய் மாநில எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர் சுமார் 1,000 பேர் அடங்கிய கூட்டம் ஒன்றின்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து பலரைக் காயப்படுத்தினர் என்று தெரிய

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

ஈரோடு வருகை

19—8—56 மாலை 5-மணிக்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஈரோடு நகரசபையினரால் வரவேற்பு வழங்கப்படும்.

மாலை 7-மணிக்கு, கோட்டை தேப்பக்குள மைதானத்தில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டம்

★

இராசிபுரம் :

புதுசந்தைப் பேட்டையில்
19—8—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :
அண்ணு
என். வி. நடராசன்

★

சென்னை—மயிலை :

கோபதி நாராயணசாமி செட்டிதெருவில்
44-வது வட்ட தி. மு. கழக 7-வது ஆண்டு விழா
19—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
பி. இராமசாமி

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
வி. எஸ். கோவிந்தராசன்

★

திருச்சி :

டவுன்ஹால் முன்னிலையில்
19—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
சு. அருணகிரி

பேசுவோர் :
கண்ணதாசன்
அம்பில்-தர்மலிங்கம்
எம். எஸ். மணி

★

திருவில்லிப்புத்தூர் :

நாயர் சதுக்கம்
19—8—56 இரவு 7 மணிக்கு

தலைவர் :
மா. குருசாமி

பேசுபவர் :
கி. பி. சிற்றரசு

★

விருத்தாசலம் :

19—8—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :
க. அன்பழகன்
ப. உ. சண்முகம்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

வளையாம்பாட்டி :

19—8—56 மாலை 6 மணிக்கு

தி. மு. கழகத் துவக்க விழா

பேசுவோர் :
ஜே. எச். பகதூர்
மு. பாண்டியன்
ந. நாச்சியப்பன்
டி. பி. கேசவன்

★

கொளத்தூர் :

சூலை மைதானத்தில்
20—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
கே. பி. நரசிம்மன்

பேசுபவர் :
அண்ணு

★

சென்னை—அயன்புரம் :

மார்க்கெட் மைதானத்தில்
20—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
கே. வீராசாமி

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
வி. எஸ். கோவிந்தராசன்

பொத்தனூருக்கு

பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

வருகை

★

வரவேற்பு—பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்

20-8-56 மாலை 6 மணிக்கு, பொத்தனூர் திரு. வி. க. திட்டில், தோழர் வி. காளியப்பன் தலைமையில் நடைபெறும் கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் வி. சிவப்பிரகாசம், இரா. செகநாதன், வி. ஏ. இராமநாதன், கு. தங்கசாமி ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 3 மணிக்கு பொதுச்செயலாளர் அவர்கள், நோயால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக் காலைப் பார்வையிடுவர்.

மாலை 4 மணிக்கு, வேலூர் ஊராண்மைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பு வழங்கப்படும்.

மாலை 4-30 மணிக்கு வேலூர் வ.உ.சி. மைதானத்திலிருந்து தோழர் வி. ஏ. இராமநாதன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும்.

திருச்சி நகர தி. மு. க.

தோழர்களுக்கு அறிவிப்பு

"திருச்சி நகரத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாதத் தோழர்கள், 20-9-56-ந் தேதிக்குள் திருச்சி தாலுகா ஆபீசில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். மற்ற விபரங்கள் திருச்சி நகர தி. மு. கழகத்தில் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, திருச்சி நகர தி. மு. க. செயலாளர் எம். எஸ். மணி அவர்கள் அறிவிக்கிறார்.

சித்தூர் மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

"19-8-56 காலை 10-மணிக்கு, சித்தூர் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், வங்கனூர் (திருத்தணி வழி) தி. மு. கழகத்தில் நடைபெறும்,

என்று, சித்தூர் மாவட்டச் செயலாளர் கே. பார்த்தசாரதி அவர்கள் அறிவிக்கிறார்.

பவானி தொகுதி தி. மு. கழகக் குழு

"19-8-56 காலை 10 மணிக்கு, ஈரோடு தோழர் சம்பத் அவர்கள் இல்லத்தில், பவானி தொகுதிக் குழுக் கூட்டம் நடைபெறும். இத் தொகுதிக் குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து, ஆய்வுரை கூறுவார்."

என்று, தோழர் இராசன் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

18—8—56 மாலை 7 மணிக்கு, சென்னை - இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், கல்மண்டபம் நகரசபை ஆண் பள்ளியில், திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள் 'இல்வாழ்கை' எனும் அதிகாரத்திற்கு பொருள் கூறி விரிவுரை நிகழ்த்துவார்.

சிவகெங்கை பாண்டியன் நினைவுப் படிப்பக 2-வது ஆண்டு விழா

19-8-59 மாலை 6-மணிக்கு, மேற்படி படிப்பக ஆண்டு விழாவில், தோழர் கி. மனோகரன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நாளது ஆவணித் திங்கள் (19—8—56) ஞாயிறு காலை 9-மணியளவில், என்மகன் செல்வன் : காங்கயனுக்கும், பேளுக்குறிச்சி மிட்டாதார் வி. சுப்பராய (கவுண்டர்) அவர்களின் மகள் செல்வி : மங்களம்மாளுக்கும் பேளுக்குறிச்சியில் எனது இல்லத்தில் அண்ணு அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமணவிழாவிற்குத் தாங்கள் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

குறிப்பு : இதனையே அழைப்பாகக் கருதி, திருமண விழாவில் தோழர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

யானும் அவ்வண்ணமே கோருகிறேன் :
வி. சுப்பராய கவுண்டர்,
மிட்டாதார், பேளுக்குறிச்சி

தங்களன்புள்ள
ஜி. பி. சோமசுந்தரம்
பேளுக்குறிச்சி

இராசீபுரத்தில் அண்ணு

நிகழ்ச்சிகள்

★

ஆக. 19 : காலை 6 மணி : நகர தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஏ. சீனிவாசன் திருமணத்திற்குத் தலைமை வகித்தல்;

காலை 9 மணி : பேளுக்குறிச்சி தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் புதல்வன் தோழர் காங்கையன் திருமணத்திற்குத் தலைமை வகித்தல்;

மாலை 6 மணி : புது சந்தைப் பேட்டையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம். (துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்துகொள்வார்.)

திருமணங்கள்

★

26—8—56 காலை 9-மணிக்கு, பெரிய காஞ்சீபுரம் யாதவ சத்திரத்தில், தோழர் சி. வி. எம். அண்ணுமலை தலைமையில், தோழர் இரா. வெங்கடேசன் —தோழியர் சரசுவதி சீர்திருத்தத் திருமணம் நடைபெறும்.

அண்ணு அவர்களும், தோழர்கள் காஞ்சி—கல்யாணசுந்தரம், இராம-அரங்கண்ணல், ஈழத் தடிகள் ஆகியவர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

19—8—56 காலை 8 மணிக்கு, திருவானைக்கோவில் ஆறாடு வேளாளர் சத்திரத்தில் தோழர் கண்ணதாசன் தலைமையில் தோழர் டி. ஆர். நாராயணன்—தோழியர் யசோதை வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்

* * *

19—8—56 காலை 10 மணிக்கு, பெங்களூர்—தண்டு ராவ்பகதூர் ஆற்காடு நாராயணசாமி சத்திரத்தில், தோழர் மு இராமச்சந்திரன் —தோழியர் சி. சாரதாம்பாள் திருமணம் தோழர் ஏ. எம். தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். பெங்களூர் ஆலணப்பதிவாளர் எச். ஆர். சேசாத்திரி அவர்களால் திருமணம் பதிவு செய்யப்படும். தோழர் மு. சி. வேணு தோழியர் சி. ஆர். விசாலக்குமி-சிவலிங்கம் அம்மையார் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

19—8—56 காலை 10 மணிக்கு இராமநாய்க்கன்பட்டி உறவின் முறை காடார்கள் உயர்தர ஆரம்பப்பள்ளியில், தோழர் பால்சாமி—தோழியர் பிச்சைக்கனி திருமணம் நடைபெறும்.

* * *

20—8—56 காலை 6 மணியளவில், குன்னத்தூர் மூலவயலில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தோழர் கே. என். நடராசன்—தோழியர் ஏ. பாப்பம்மாள் திருமணம் நடைபெறும்

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

18—8—56 மாலை 6-30 மணிக்கு, கழகப் பணி மனையில், மேற்படி வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை-சூளை கலைவாணி இரவுப் பள்ளி 4-வது ஆண்டு விழா

19—8—56 மாலை 6 மணிக்கு, சென்னை-சூளை ஆஸ்பத்திரி மைதானத்தில், மேற்படி விழாவில், திரு. என். கோபாலமேனன் (சென்னை சட்டசபை சபா நாயகர்) தலைமையில் நடைபெறும். பல பிரமுகர்கள் கலந்துகொள்வர்.

சென்னை திருவள்ளுவர் கழகம்

18—8—56 மாலை 6½ மணிக்கு, மேற்படி கழகத்தில் (எண் 10 மாணிக்கச் செட்டித் தெரு), திரு. அருணசல தேசிகர் அவர்கள் 'திருக்குறள்—இல்வாழ்க்கை' என்ற பகுதி பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை தாய்மார் கழகம்

18-8-56 சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை—1 பெத்தநாயக்கன்பேட்டைத் தாய்மார் கழகச் சார்பில், முத்துக் கிருஷ்ணன் தெரு, 15-ம் எண் ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு வழக்கம்போல் நடைபெறும். பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் 'இல்லக்கிழத்தியாமை' என்ற அதிகாரத்தினைத் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவார்.

மாதவரம் பிர்க்கா தி. மு. க. பிரச்சாரக் குழு

"18—8—56 மாலை 7 மணிக்கு, கொடுங்கையூர் தி. மு. கழகப் பணி மனையில், பிரச்சாரக் குழு செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதபோது பல பிரச்சினைகள் குறித்து ஆராயவிருப்பதால் செயற்குழு (பிரச்சார) உறுப்பினர்கள் தவறுது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, செயலாளர் தோழர் மு. இராசன் அறிவிக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

19—8—56 காலை 10 மணியளவில், கோவை அழகிரி சொற்பயிற்சி மன்றச் சார்பில், 'கடமை' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

பெங்களூர் அக்கிப்பேட்டை, பயிற்சி மன்றத்தின் சார்பில், 19—8—56 காலை 10 மணிக்கு, தோழர் ஜே. கனகசுந்தரம் தலைமையில், 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.